மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காரியாபட்டி.

**அசல் வழக்கு எண். 27/2024 (பழைய அசல் வழக்குஎண். 219/ 2016 )**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr – III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : செல்வம் ( வா.சா.2 ) | சாதி : |
| த/பெ. | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

**09.09.2025**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது சொந்த ஊர் உவர்குளம் ஆகும். நான் எத்தனை வருடங்கள் அந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்தது முதல் அங்கு தான் குடியிருந்து வருகிறேன். நான் 7ம் வரை படித்துள்ளேன். தற்போது நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். தற்போதும் நான் உவர்குளத்தில் தான் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கின் பிரதிவாதி மல்லிகாவை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவரது கணவர் தனக்குமாரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கும், தனக்குமாருக்கும் எவ்வாறு பழக்கம் என்றால் 1ம் பிரதிவாதியின் கணவரின் தாயார் எங்கள் ஊரில் பிறந்தவர் அதன் மூலம் எனக்கு பழக்கம். என் அப்பாவுடன் உடன்பிறந்தவர்கள் 2 நபர்கள். 1. செல்லதேவர், 2.வெள்ளைசாமிதேவர் ஆவார்கள். தாவா சொத்து எனக்கு எவ்வாறு

பாத்தியம் என்றால் அது எனது அப்பாவின் பூர்வீக சொத்தாகும். அந்த பூர்வீக சொத்து எவ்வாறு என் தந்தைக்கு பாத்தியம் என்று கூறினேன் என்றால் அது எனது தந்தையின் பூர்வீக சொத்தாகும். அதற்கு மூலபத்திரம் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் பூர்வீக சொத்து என்பதால் மூலபத்திரம் இல்லை. தாவா சொத்து என் அப்பாவிற்கு பூர்வீக பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாவா சொத்தை மல்லிகா மற்றும் தனக்குமாருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் மல்லிகாவிற்கு மட்டும் தான் கிரையம் கொடுத்துள்ளேன். நான் தாவா சொத்தை பட்டா எண்.113 வைத்து தான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு சுமார் 6 வயது இருந்தபோது இறந்துவிட்டார். என் அப்பா இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் யாரும் இல்லை. என் அப்பாவிற்கு நானும் என் தாயாரும் தான் வாரிசுகள் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்திரணம், நான்குமால் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்தின் விஸ்தீரணம்.2 ஏக்கர், 42 செண்டு, சர்வே எண்.68/2, சொத்தின் நான்குமால் வடக்கே – மலைச்சாமி இடம், கிழக்கே – தனக்குமார் இடம், மேற்கே – வீரப்பத்திரன் இடம், தெற்கே – தனக்குமார் இடம். தாவா இடத்திற்கு அருகிலேயே எனக்கு பாத்தியப்பட்ட மற்றொரு இடம் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் என்

அப்பா பெயர் மட்டும் தான் உள்ளது என்றும் சர்வே எண், விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு முன்பு வில்லங்க சான்று போட்டு பார்த்தேனா என்றால் நான் வில்லங்கசான்று போட்டு பார்க்கவில்லை. ஆனால் என்னிடமிருந்து கிரையம் பெற்ற மல்லிகா வில்லங்க சான்று போட்டு பார்த்தார். ஒரு சொத்தை வாங்குவதற்கு முன்போ விற்பனை செய்வதற்கு முன்போ வில்லங்க சான்றிதழில் போட்டு பார்க்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, கஷ்ட காலங்களில் எனது சொத்தை மல்லிகாவிற்கு விற்பனை செய்தேன். நான் எந்த வருடம் மல்லிகாவிற்கு என் சொத்தை கிரையம் கொடுத்தேன் என்றால் 2013 வருடம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் சர்வே எண்.68/2, விஸ்திரணம் 2.42 என காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உரிமையாளரின் பெயர் வீரபத்திரன் என்று உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 5 ஆவணத்தில் சர்வே எண்.68/2, விஸ்திரணம் 2.42 க்கு 01.01.1956 முதல் 06.03.2013 வரை நான் மல்லிகாவிற்கு சொத்தை கிரையம் கொடுத்தேன் தவிர வேறு எந்த ஒரு பரிவர்த்தனைகளும் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் என் அம்மா பெயர் உள்ளதா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் என் பெயரும், என் அம்மா பெயரும் உள்ளதா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 3 மற்றும் பி.வா.சா.ஆ 4 ஆவணங்கள் 2000 வருடத்திற்கு பிறகு தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் பட்டா எண்.113 ல் ரசீது செலுத்தியதில் செல்வம்,

செல்லத்தேவர் ஆகியோர்கள் பெயர்கள் உள்ளது என்றால் சரிதான். என் பெயர் உள்ள ரசீது அனைத்தும் 2000 வருடத்திற்கு பிறகு தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் சமயதேவர் மகன் செல்வம், சமயதேவர் மனைவி புஷ்பம் என்றும் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் சமையதேவர் மகன் செல்வம், சமையதேவர் மனைவி புஷ்பம் என்றும் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு நபர்களும் ஒவ்வொரு விதத்திலும் எழுதுவார்கள். எனது அப்பா சமயதேவர் பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 ஆவணத்தின் செட்டில்மெண்டு ரிஜிஸ்டர் நகல் ஆவணத்தில் சர்வே எண்.68/2, விஸ்திரணம் 2.42 செண்டு, பட்டா எண்.30, 14.03.2025 தேதி வரை வீரபத்திரன் பெயரில் காணப்படுகிறது என்றால் சரிதான். ஆனால் அவை பொய்யாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**